Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., **DHINATH DHALAM** Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 140 | ஞாயிற்றுக்கிழமை Sunday | 22.03.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# அடுத்த 5 ஆண்டுகளில் துறை வாரியாக நிர்ணயித்துள்ள வளர்ச்சி இலக்குகள்




## பட்டியலை வெளியிட்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை:Stalin Statement என்ற இலக்குகளை அடையவும், தமிழ்நாடு வெல்லவும் திமுகவுக்கு வாக்களியுங்கள் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர்வெளியிட்டுள்ள பதிவில், "தமிழ்நாட்டின்வளர்ச்சிமுழுமையடைய, அடுத்த 5 ஆண்டுகளும் திராவிட மாடல் தொடர வேண்டும்! அடுத்த 5 ஆண்டுகளில், துறைவாரியாகநான் நிர்ணயித்துள்ள வளர்ச்சி இலக்குகளை Stalin Statement என்ற பெயரில் வெளியிட்டிருந்தேன். நேர்காணலுக்காக அறிவாலயத்திற்கு வந்த உடன்பிறப்புகளைப் பார்த்தபோது, அவர்களுடைய தொகுதிகளைச் சார்ந்த, அறிவாலயம் பக்கமே வந்திராத கழகத்தின் ஆணிவேரான தொண்டர்களின் முகங்களும் என் மனதில்தோன்றின.தலைவர் முதல் தொண்டர் வரை அத்தனை பேரிடமும் ஒரே உணர்வு கொண்ட இயக்கம்தானே நம் திராவிட முன்னேற்றக் கழகம்!

ஒவ்வொரு தொகுதிவாரியாக நேர்காணல் செய்தபோது, ஒவ்வொருவரும் ஐந்தாண்டுகால திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளால் மக்கள்பெற்றுள்ளபலன்கள்தான், திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைவதற்குக் காரணமாக இருக்கப்போகின்றன என்பதைச் சொல்லத் தவறவில்லை. ஒருவர், மகளிர் உரிமைத் தொகை பற்றி சொன்னால், இன்னொருவர் விடியல் பயணம் பற்றி விளக்கினார்.மற்றொருவர், புதுமைப்பெண் என்றதும், உடனே, 'நான் முதல்வன்' திட்டத்தால் தங்கள் ஊரில் பயன் பெற்றவர்களைப் பற்றி அடுத்தவர் சொல்கிறார். தமிழ்ப்புதல்வன், காலை உணவுத் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் – நம்மைக் காக்கும் 48,தாயுமானவர் திட்டம், கலைஞர் கனவு இல்லம் எனச் சாதனைகளால் நிறைந்த 5 ஆண்டுகால ஆட்சியைப் பற்றி ஒவ்வொருவரும் குறிப்பிட்டு, கழக ஆட்சிதான் தொடரும் என்ற உறுதியையும் வழங்கினார்கள்.

சொன்னதைச் செய்யும் திராவிட முன்னேற்றக் கழக அரசு, சொல்லாத திட்டங்களையும் நிறைவேற்றியிருக்கிறது. கடந்த 2021 தேர்தல் அறிக்கையில் வழங்கப்பட்ட பெரும்பாலான வாக்குறுதிகளை நிறைவேற்றி, கூடுதலான புதிய திட்டங்களையும் செயல்படுத்தி, மக்களின் பேராதரவைப் பெற்றுள்ள திராவிட மாடல் அரசின் சார்பில் அறிமுகப்படுத்தப்பட்ட 'உங்க கனவ சொல்லுங்க' திட்டத்தின் நிறைவாக நடைபெற்ற 'கனவுகள் மெய்ப்படும்' நிகழ்வில் 'தமிழ்நாடு 2030' என்கிற தொலைநோக்குப் பார்வையிலான 14 அம்சங்கள் கொண்ட திட்டத்தையும் உங்களில் ஒருவனான நான் அண்மையில் வெளியிட்டிருந்தேன்.

இவற்றை அடையவும்,தமிழ்நாடு வெல்லவும் திமுகவுக்கு வாக்களியுங்கள், "இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் Stalin Statement என்ற பெயரில் அவர் வெளியிட்டிருந்த வளர்ச்சி இலக்குகள்,

*ஊரக வளர்ச்சித் துறைசார்பில் உத்தமர் காந்தி மாதிரி கிராமங்கள் திட்டம்

*தொழில்துறைசார்பில் 50 லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு

*கால்நடை – பால்வளம் மற்றும் மீன்வளத்துறைசார்பில்பால் உற்பத்தி உயர்வு – மீனவர்கள் வாழ்வு மேம்பாடு

*நகராட்சி நிருவாகத் துறைசார்பில் உட்கட்டமைப்பில் உலகளவில் உயரும் நம் நகரங்கள்

*சிறு – குறு நடுத்தரத் தொழில் துறை சார்பில்,5 சிறப்புத் தொழில் குழுமங்கள் அமைக்கப்படும்

*நெடுஞ்சாலைத் துறை சார்பில் பாதுகாப்பான நவீன சாலை தொழில்நுட்பம்

*கைத்தறி மற்றும் ஜவுளித்துறை சார்பில் நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் சிறப்பான திட்டங்கள்

*வீட்டு வசதித்துறையின் சார்பில் கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் சேர்த்து 7 லட்சம் வீடுகள் கட்டித்தரப்படும்

*மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் தேவைப்படும் அனைவருக்கும் போதிய மருத்துவக் காப்பீடு

*வேளாண்மை மற்றும்உழவர்நலத்துறை சார்பில் சாகுபடி பரப்பு அதிகரிக்கப்படும்

*பள்ளிக்கல்வித்துறைசார்பில்ஸ்மார்ட் கிளாஸ் ரூம், லைப்ரரி 5.0, வெற்றிப்பள்ளிகள் திட்டம் உள்ளிட்ட திட்டங்கள்

*உயர்கல்வித்துறை சார்பில் நான் முதல்வன் 2.0 திட்டம் உள்ளிட்ட திட்டங்கள்

*பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குப் பொருளாதார முன்னேற்றம்

*ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில் ஒவ்வொருவருக்கும் வீட்டுமனைப் பட்டா.

# புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தல்: 9 வேட்பாளர்களை அறிவித்தது பாஜக




புதுச்சேரி: புதுச்சேரியில் பாஜக போட்டியிடும் தொகுதிகளில் 9-ல் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, ஒரு முன்னாள் அமைச்சர் தவிர அனைவருக்கும் வாய்ப்பு தரப்பட்டுள்ளது.

பாஜக மத்திய தேர்தல் குழு கட்சியின் தேசியத்தலைவர் நிதின் விபின் தலைமையில் கூடியது. இக்கூட்டத்தில் பிரதமர் மோடி, பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், உள்துறை அமைச்சர் அமித்ஷா, மற்றும் மத்திய தேர்தல் குழு அனைத்து உறுப்பினர்களும் பங்கேற்றனர்.

இதில் புதுச்சேரி சட்டப்பேரவைக்கு பொதுத்தேர்தலுக்கான 9 தொகுதிகள் வேட்பாளர்களை தலைமைப்பொறுப்பாளரும் தேசிய பொதுச்செயலருமான அருண்சிங் வெளியிட்டுள்ளார்.

அதன்விவரம்:

*மண்ணாடிப்பேட்- அமைச்சர் நமச்சிவாயம்,

*ஊசுடு-எம்எல்ஏ தீப்பாய்ந்தான்,

*காலாப்பேட்-எம்எல்ஏ கல்யாணசுந்தரம், * ராஜ்பவன்- மாநிலத்தலைவர் ராமலிங்கம், * முதலியார்பேட் - அமைச்சர் ஜான்குமார், * மணவெளி- சட்டப்பேரவைத் தலைவர் செல்வம், * திருநள்ளார்- எம்எல்ஏ ராஜசேகரன், * நிரவி டி ஆர்பட்டிணம் - மீனாட்சி சுந்தரம், * மாஹே- தினேசன் ஆகியோர் அறிவிக்கப்பட்டுள்ளனர். இம்முறை,மொத்தம் 10 தொகுதிகளில் போட்டியிடுவதாக பாஜக அறிவித்து தற்போது 9 தொகுதிகளுக்கு வேட்பாளர்களை அறிவித்து உள்ளது.

இதில் ஊசுடுவில் வென்ற பாஜக முன்னாள் அமைச்சரும், தற்போதைய எம்எல்ஏவுமான சாய் சரவணன் குமாருக்கு சீட் தரப்படவில்லை. என்.ஆர்.காங்கிரஸில் அமைச்சராக உள்ள லட்சுமி நாராயணன் போட்டியிட்டு வென்ற ராஜ்பவன் தொகுதி பாஜகவுக்கு தரப்பட்டுள்ளதால் அவருக்கு வாய்ப்பு தரப்படாது. அதேபோல் மங்கலம் தொகுதியில்அமைச்சர்தேனீ ஜெயக்குமாருக்கு சீட் தராமல் முதல்வர்ரங்கசாமி போட்டியிடுவது குறிப்பிடத்தக்கது.

# தங்கம் விலை மீண்டும் அதிரடி வீழ்ச்சி பவுனுக்கு ரூ.2,640 குறைவு!



22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை (மார்ச் 21) பவுனுக்கு ரூ.2,640 குறைந்து உள்ளது. வெள்ளி விலை கிலோவுக்கு ரூ.10,000 என குறைந்துள்ளது.

சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, தங்கத்தின் மீதான முதலீடு அதிகரிப்பு, உலக பங்குச் சந்தை முதலீடுகள் உள்ளிட்டவற்றின் அடிப்படையில், தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்ப டுகிறது. உலக அளவில் தங்கத்தை இறக்குமதி செய்யும் நாடுகளில்இந்தியாமுன்னணி யில் உள்ளது.

ஈரான் – அமெரிக்கா, இஸ்ரேல் இடையிலான போர் காரணமாக தங்கத்தின் விலையில் தாக்கம் ஏற்பட்டுள்ளது.அந்தவகையில் வர்த்தகம் தொடங்கியதும் தங்கம் விலை சரிந்தது. 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.333 குறைந்து, ஒரு கிராம் ரூ.13,620-க்கும், பவுனுக்கு ரூ.2,640 குறைந்து,ஒருபவுன் ரூ.1,08,960-க்கும் விற்பனை ஆகிறது. பவுனுக்கு ரூ.2,880 குறைந்து, ஒரு பவுன் ரூ.1,18,864-க்கு விற்பனை ஆகிறது. இதேபோல் வெள்ளியின் விலை கிராமுக்கு ரூ.10 குறைந்து,ஒரு கிராம் ரூ.250-க்கு விற்பனை ஆகிறது. ஒரு கிலோ கட்டி விலை கிலோவுக்கு ரூ.10,000 குறைந்து,ஒருகிலோ ரூ.2,50,000-க்கு விற்பனை ஆகிறது.

# வானிலை முன்னறிவிப்பு: தமிழகத்தில் மார்ச் 24 வரை மிதமான மழைக்கு வாய்ப்பு



சென்னை: தமிழகத்தில் மார்ச் 24-ம் தேதி வரை ஒரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மன்னார் வளைகுடா முதல் வடக்கு உள் கர்நாடகம் வரை ஒரு வளிமண்டலகீழடுக்குசுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக நாளை (மார்ச் 22) மேற்கு தொடர்ச்சிமலைமாவட்டங்களிலும், 23, 24 தேதிகளில் கோவை, நீலகிரி மாவட்டங்களிலும்ஒரிரு இடங்களில் லேசான மழை பெய்யக் கூடும்.

25, 26 தேதிகளில் தமிழகம், புதுச்சேரியில் வறண்ட வானிலை நிலவக்கூடும். 27-ம் தேதி தமிழகத்தில் ஒரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் நாளை அதிகபட்ச வெப்பநிலை வழக்கமான அளவிலும், 23, 24 தேதிகளில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயர்ந்தும் இருக்கும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 93 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 79 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டியும் இருக்கும்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக கன்னியாகுமரி மாவட்டம் சுருளக்கோடு, மாம்பழத்துறையாறு, அணைகெடங்கு ஆகிய இடங்களில் தலா 3 செமீ, திருநெல்வேலி மாவட்டம் ஊத்து, நாலுமுக்கு, மதுரை மாவட்டம் சாத்தியார், விருதுநகர் மாவட்டம் சிவகா, கன்னியாகுமரி மாவட்டம் பெருஞ்சாணி அணை ஆகிய இடங்களில் தலா 2 செமீ மழை பதிவாகியுள்ளது.

**செய்திகள்**
**உடனுக்குடன் படிக்க**
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

## உலக தண்ணீர் தினம்

# கவிதை,பேச்சு,ஓவியம் மூலமாக தண்ணீர் சேமிப்பை வலியுறுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்திய மாணவர்கள்




தேவகோட்டை – உலக தண்ணீர் தினத்தினை முன்னிட்டு சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்வில் மாணவர்கள் கவிதை,குழு பாடல்,பேச்சு மூலமாக தண்ணீர் சேமிப்பின் அவசியத்தை வலியுறுத்திவிழிப்புணர்வுஏற்படுத்தினார்கள்.

நிகழ்ச்சியில் ஆசிரியை முத்துமீனாள் வரவேற்றார்.பள்ளி தலைமை ஆசிரியர் லெ.சொக்கலிங்கம் தலைமை தாங்கினார். தேவகோட்டை தோட்டக்கலை உதவி இயக்குனர் பெப்பின் இளம்பரிதி மாணவர்களிடம் பேசுகையில்,தண்ணீர் இல்லாமல் எந்த உயிரினமும் வாழ முடியாது. உலகில் நான்கில் மூன்று பங்குதண்ணீரால்சூழப்பட்டுள்ளது, தண்ணீர் கடலாகவும், பெருங்கடல் களாகவும், ஏரிகளாகவும் , குட்டையாகவும் , ஆறுகளும், நிலத்தடி நீராகவும், வானில் வளிமண்டலத்தில் இருக்கக்கூடிய மேகக்கூட்டங்கள் ஆகவும் எல்லா வடிவத்திலும் தண்ணீர் உள்ளது.

நமது உடலில் 65 முதல் 70சதவிகிதம்நீரால் உருவானது. நீர் இல்லை என்றால் நம் உடலில் எந்த வேலையும் செய்யாது.

உலகம் உருவான உடனே தண்ணீர் உருவானது. அதில்தான் உயிரினங்களே தோற்றுவிக்கப்பட்டது. தண்ணீரில் உருவான முதல் உயிரி பாக்டீரியா. பாக்டீரியாவின் வளர்ச்சி அடைந்தது. அடுத்து இரு வாழ் உயிர் இனங்கள் உருவாகின. டைனோசர் உருவாகியது.

எல்லாம் தாண்டி பாலூட்டிகள் உருவாகின. மனிதர்கள்தான் பரிணாம வளர்ச்சி அடைந்து 6 அறிவுடன் வாழ்கிறார்கள்.

நம்முடைய அடுத்த தலைமுறைக்கு தண்ணீரை சேமித்து வைக்க வேண்டும். மொத்த தண்ணீரில் ஒரு பர்சன்டேஜ் மட்டுமே குடிக்கும் தண்ணீராக உள்ளது. தண்ணீர் மிக மிக முக்கியமானது.

அதனால்தான் இந்தியாவில் உள்ள முக்கிய ஆறுகள் எல்லாம் பெண்களின் பெயரை வைத்து வணங்குகிறார்கள். கங்கை, கோதாவரி, பிரம்மபுத்திரா என்று வணங்குகிறார்கள்.

அதனால்தான் தண்ணீர் மிக முக்கியமானதாக உள்ளது. தண்ணீரை மாசு படுத்த கூடாது. தண்ணீரை வீணாக்ககூடாது. மழைநீர்சேகரிப்பு மூலம் தண்ணீரை சேகரித்து நம்முடைய அடுத்த தலைமுறைக்கு தண்ணீரை சேமித்து கொடுக்கவேண்டும் . என்று பேசினார். தண்ணீர் சேமிப்பு தொடர்பாக போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் விஜய் கண்ணன், ,ரித்திகா,நந்தனா, ,ஜாய் லின்சிகா , ஜெபிகா , நவீன், ஸ்டெபி ஆகியோருக்கு செடிகளை வழங்கினார். நிறைவாக ஆசிரியர் ஸ்ரீதர் நன்றி கூறினார்.

## கென் கருணாஸ் இயக்கத்தில் அவர் உட்பட அனிஷ்மா அருள்குமார், மீனாட்சி தினேஷ் ஆகியோர் நடிப்பில்

# தயாரிப்பாளர் கருப் தயாரிப்பில் உருவாகியுள்ள யூத் திரைப்படம் திரையரங்குகளில் வெளியாகி பலரது வரவேற்பை பெற்றுள்ளது



பட குழுவினர் பல்வேறு பகுதிகளில் திரையரங்கிற்கு நேரடியாக சென்று பார்வையாளர்களிடம் திரைப்படம் குறித்து கேட்டறிந்து வருகின்றனர். அதன்படி கோவை ரேஸ்கோர்ஸ் பகுதியில் உள்ள தனியார் திரையரங்கிற்கு வருகை தந்த படக்குழுவினர் செய்தியாளர்களை சந்தித்தனர்.

படத்தின் இயக்குனரும்நடிகருமானகென்கருனாஸ், அனிஷ்மா அருள்குமார், மீனாட்சி தினேஷ், அபிஷன் தேவர்ஷா,தயாரிப்பாளர் கருப் ஆகியோர் செய்தியாளர்களை சந்தித்தனர். அப்பொழுது ஒவ்வொருவரும் இந்த படம் குறித்தும் இந்த படத்தில் நடித்த அனுபவம் குறித்தும் தற்பொழுது இந்த படத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ள வரவேற்பு குறித்தும் கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.

இந்தசெய்தியாளர் சந்திப்பில் பேட்டியளித்த கென்கருணாஸ், அனைத்து பகுதிகளிலும் இந்த படம் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளதாகவும் அது எங்கள் படக்குழுவிற்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிப்பதாக தெரிவித்தார். கதை எழுதும்பொழுதேசுராஜ் மற்றும் பசுபதி ஆகிய இருவரும் தான் நடிப்பது போன்று திட்டமிடப்பட்டிருந்ததாகவும் ஆனால் பசுபதி நடிப்பதற்கு தேதிகளுக்கு கிடைப்பதில் சிரமங்கள் ஏற்பட்டதாகவும் சுராஜ் அவருக்கும் நடிப்பதற்கும் தேதிகளுக்கு கிடைக்கப்பெறவில்லை பிறகுதயாரிப்பாளர்ஏதோ நிகழ்விற்கு சென்றிருந்த போது சுராஜிடம் பேசி இறுதி செய்யப்பட்டார் என தெரிவித்தார்.

இளைஞர்கள் அனைவரும் சேர்ந்து இந்த படத்தை எடுக்கும் பொழுது தங்களுக்கு அட்வைஸ் கொடுப்பதற்கும் நன்கு அனுபவம் வாய்ந்த ஒருவர் தேவைபட்டார் அப்படிப்பட்ட அனுபவம் வாய்ந்த ஒருவர் நம் திரைப்படத்திற்கு இசையமைக்க வேண்டும் என்று நினைத்ததாகவும் அப்பொழுது ஜிவி பிரகாஷை முடிவு செய்ததாகவும் ஜி வி பிரகாஷும் தனக்கும் தங்கள் குழுவினருக்கும் உறுதுணையாக இருந்ததாக தெரிவித்தார்.

தனக்கு இயக்குனராக வேண்டும் என்ற ஆசையே இருந்ததில்லை ஆனால் இயக்குனர் ஆன பிறகு தற்பொழுது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது என்று குறிப்பிட்டார். அசுரன் விடுதலை ஆகிய படங்களில் சீரியஸான கதாபாத்திரங்களை மட்டுமே நடித்ததால் அது போன்ற கதாபாத்திரங்கள் மட்டுமே தொடர்ச்சியான படங்களில் தனக்கு கிடைத்ததாகவும் அப்படி இருக்கும் பொழுது ஒரே மாதிரி இருக்கக் கூடாது என்பதற்காகவும் வேற எந்த இயக்குனரும் மாற்று கதாபாத்திரத்தை கொடுப்பதற்கு முன் வராததாலும் இந்த படத்தை ஜாலியாக இயக்கியதாக குறிப்பிட்டார்.

# தமிழகத்தில் குடிநீர் கேன், பாட்டில் விலை திடீர் உயர்வு



ஈரான், இஸ்ரேல் போர் எதிரொலியால் கச்சா எண்ணை இறக்குமதி பெரும்பாதிப்பை சந்தித்துள்ளது.இது மறைமுகமாக பல்வேறு பொருட்களின் விலை உயர்வுக்கு காரணமாக அமைந்துள்ளது. இந்தநிலையில் தமிழகத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் கேன்களின் விலை ஒரு லிட்டருக்கு ரூ.3 உயர்ந்துள்ளது.20 லிட்டர் கேன் விலை ரூ.5 உயர்ந்துள்ளது. மூலப்பொருட்களின் விலை உயர்வு, மின் கட்டண உயர்வு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் இந்த விலை உயர்வை அமலுக்கு கொண்டு வருவதாக அடைக்கப்பட்ட குடிநீர் உற்பத்தியாளர் சங்கம் தெரிவித்து உள்ளது.

இது தொடர்பாக தமிழ்நாடு அடைக்கப்பட்ட குடிநீர் உற்பத்தியாளர் சங்க தலைவர் கூறுகையில்,

ஏற்கனவே கடந்த 20 ஆண்டுகளாகஅனைத்து சூழல்களையும் சமாளித்து மக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வினியோகித்து வருகிறோம். தற்போது மூலப்பொருட்கள் விலை உயர்வு, வேலை ஆட்கள் சம்பளம்அதிகரிப்பு,மின் கட்டண உயர்வு காரணமாக குடிநீர் விலையை உயர்த்தும் கட்டாயம் ஏற்பட்டு உள்ளது.

# சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு ரூ.1000 கோடி கடன்கள் வழங்கப்படும்

## இந்தியன் வங்கியின் செயல் இயக்குனர் கோவையில் அறிவிப்பு




சிறு குறு மற்றும் நடுத்தரதொழில்நிறுவனங்களுக்கு 1000 கோடி ரூபாய் கடன்களை கோவை கள பொது மேலாளர் அலுவலகத்தின் கீழ் இயங்கும் மண்டலங்கள் மூலம் வழங்க இலக்கு நிர்ணயித்துள்ளதாக இந்தியன் வங்கியின் செயல் இயக்குனர் கோவையில் தெரிவித்துள்ளார்

இந்தியன் வங்கியின் செயல் இயக்குனர் அசுடோஷ் சௌத்ரி கோவையில் நடைபெற்ற குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான கடன் வழங்கும் முகாமில் கலந்து கொண்டார்.

முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தச் சிறப்பு கடன் முகாம் மூலம் சுமார் 1000 கோடி ரூபாய் கடன்களை கோவை கள பொது மேலாளர் அலுவலகத்தின் கீழ் இயங்கும் மண்டலங்கள் மூலம் வழங்க இந்தியன் வங்கி திட்டமிட்டுள்ளது. இதில் இன்றைய ஒரு நாள் நிகழ்வில் மட்டும் சுமார் 200 கோடி ரூபாய் மதிப்பிலான கடன்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இந்தியன் வங்கியின் எம்எஸ்எம்இ கடன் பிரிவானது தற்போது 16.5% என்ற ஆரோக்கியமான வளர்ச்சி விகிதத்தைக் கொண்டுள்ளதாக கூறிய அவர்,

பாரம்பரிய கடன் வழங்கும் முறையிலிருந்து மாறி, வங்கிதற்போதுடிஜிட்டல் தொழில்நுட்பத்தின் மூலம் விரைவாகக் கடன் வழங்கும் வசதியை அறிமுகப்படுத்தியுள்ளதாகதெரிவித்தார். வாடிக்கையாளர்கள் தங்களின் வருமான வரித் தாக்கல், ஜிஎஸ்டி விவரங்கள் மற்றும் வங்கிக் கணக்கு அறிக்கைகளை சமர்ப்பிக்க ஒப்புதல் அளித்தால், வெறும் 30 நிமிடங்களில் கடனுக்கான 'கொள்கை அளவிலான அனுமதி' வழங்கப்படுகிறது.

இந்த டிஜிட்டல் அனுமதிக்குப் பிறகு, சம்பந்தப்பட்ட தொழில் நிறுவனங்களை வங்கி அதிகாரிகள் நேரில் ஆய்வு செய்து, விரைவாகக் கடன்களை இறுதி செய்வார்கள் என அவர் தெரிவித்தார்.. இந்த சந்திப்பின் போது,, இந்தியன் வங்கி அதிகாரிகள்,

களபொது மேலாளர் பி.சுதாராணி,மண்டல மேலாளர்கள், வெங்கட்ரமணராவ்கோவை, பாலசுப்ரமணியன் – மதுரை,தாமோதரன் – திருப்பூர், அருண் பாண்டியன் – காரைக்குடி, மற்றும் சேலம் துணை மண்டல மேலாளர்ரூபக்கேஷ்ரி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதி சக்குடி பூவந்தி சாலையில் தேர்தல் பறக்கும் படையினர் வாகன தணிக்கையின் போது ஆவணங்களின்றி கொண்டுவரப்பட்ட ரூபாய் 27 லட்சம் மதிப்பிலான தங்க நகைகள் தேர்தல் பறக்கும் படையினர் கைப்பற்றப்பட்டு கிழக்கு சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் மூலம் கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டது

# குற்றாலம் அருவி முன் பழைய வளைவு அகற்றம்



சமீப காலமாக குற்றாலம் மெயின் அருவியில் அடிக்கடி வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உயிர் சேதம் ஏற்பட்டதை தொடர்ந்து, இந்த பாதுகாப்பு வளைவை அகற்றி புதிதாக பாதுகாப்பு வளைவு அமைக்கப் பட உள்ளது. சுற்றுலாத்துறை மூலம் 11 கோடி ரூபாய் செலவில் சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. குளிப்பதற்கு அதிக இட வசதியும், அருவிக்கரையில் பெண்கள் உடை மாற்றும் அறையும்புதிதாககட்டப்படஉள்ளன.இதுதவிர,அருவிக்குச்செல்லும்பாதைகளும்,வாகனநிறுத்துமிடமும் சீரமைக்கப்பட உள்ளன.

# தூத்துக்குடி மாணவி படுகொலை; யாதவ மகா சபை சார்பில் நிதியுதவி



செங்கல்பட்டு மாவட்டம் அண்மையில் நடைபெற்ற தூத்துக்குடி மாவட்டம் வேடநத்தம் கிராமத்தைச் சேர்ந்த பிரதீபா சமூக விரோதிகளால் படுகொலை செய்யபட்டார் இதனை அறிந்த செங்கல்பட்டு மாவட்ட மதுராந்தகம் சுற்றுவட்டார பகுதியில் உள்ள யாதவ மகா சபை நிர்வாகிகள் அவரது வீட்டிற்க்கு செங்கல்பட்டு மாவட்ட யாதவ மகாசபை நிர்வாகிகள் மாவட்ட தலைவர் கவிஞர் கலியுக கண்ணதாசன், தலைமையில், மாவட்ட செயலாளர் வாசுதேவன். மாவட்ட பொருளாளர் ஆறுமுகம்.

மற்றும் மாவட்ட கொள்கை செயலாளர் ராமநாதன். மாவட்ட துணை செயலாளர் ராமன்.பொதுக்குழு உறுப்பினர் வசந்தராஜ், மாணவரணி அமைப்பாளர் மாதவன், ஒன்றிய செயலாளர் சிலம்பரசன், ஒன்றிய துணை செயலாளர் சீனுவாசன்.ஆகியோர் நேரில் சென்று அவர்களின் குடும்பத்திற்க்கு செங்கல்பட்டு மாவட்ட யாதவ மகாசபைசார்பில் ரூபாய். 250000/-.(இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம்) வழங்கினார்கள் இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு யாதவ மகாசபை மாநில இளைஞரணி பொதுச்செயலாளர் பொட்டல் துரை. மற்றும் தூத்துக்குடி PP.ராமகிருஷ்ணன் MC. உள்ளிட்ட தூத்துக்குடி மாவட்ட யாதவ மகாசபை நிர்வாகிகள் கலந்துகொண்டனர்



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் (20.03.2026) அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தேர்தல் பொதுபார்வையாளர்கள், தேர்தல் செலவின கண்காணிப்பு பார்வையாளர்கள், தேர்தல் காவல் பார்வையாளர் ஆகியோர் முன்னிலையில் காவல்துறை உயர் அலுவலர்களுக்கான கூட்டம் நடைபெற்றது.



ஈரோடு மாவட்டம் அந்தியூர் சுன்னத் ஜமாத் சார்பில் ரமலான் திருநாள் விழா சிறப்பாக நடைபெற்றது. இதில் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி. வெங்கடாசலம் கலந்துகொண்டு பொதுமக்களுக்கு ரமலான் வாழ்த்துகளைத் தெரிவித்தார். ஜமாத் நிர்வாகிகள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் பங்கேற்ற இந்நிகழ்வில், அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டு சமூக நல்லிணக்கம் பேணப்பட்டது.

# 'சர்வதேச சந்தைக்கு வழங்க உபரி கச்சா எண்ணெய் இல்லை' கையை விரித்த ஈரான்; கலக்கத்தில் அமெரிக்கா!

தெஹ்ரான்: 'தற்போதைய நிலையில்,சர்வதேச சந்தைகளுக்கு விற்பனை செய்வதற்காக கப்பல்களில் ஏற்றப்பட்டுள்ள கச்சா எண்ணெயோ அல்லது உபரி எண்ணெய் கையிருப்போ இல்லை' என ஈரான் அரசு தெரிவித்துள்ளது. இதன் மூலமாக, மார்ச் 20 நிலவரப்படி கப்பல்களில் ஏற்றப்பட்டுள்ள ஈரான் கச்சா எண்ணெய் மீதான தடைகளைத் தளர்த்தும் அமெரிக்காவின் நடவடிக்கையை, ஈரானின் எண்ணெய் அமைச்சகம் மறுத்துள்ளது. இதுகுறித்து மும்பையில் உள்ள ஈரான் தூதரகம் வெளியிட்ட அறிக்கையில், "தற்போதைய நிலையில், சர்வதேச சந்தைகளுக்கு விற்பனை செய்யக்கூடிய வகையில், கப்பலில் ஏற்றப்பட்ட நிலையில் உள்ள கச்சா எண்ணெய் அல்லது உபரி கையிருப்பு



ஏதும் ஈரானிடம் இல்லை. தடைகளை தளர்த்தும் அமெரிக்காவின் கருத்துக்கள்,எண்ணெய் வாங்குவோருக்கு நம்பிக்கையூட்டுவதையும், சந்தையின் மனநிலையைச் சீர்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கு ஆசியப் பிராந்தியத்தில் நிலவும் மோதல் நான்காவது வாரத்தில் அடியெடுத்து வைக்கும் நிலையில், கச்சா எண்ணெய் விலை கடுமையாக உயர்ந்து, சர்வதேச எண்ணெய் எரிவாயு சந்தை ஏற்கனவே பெரும் நிலையற்ற தன்மையுடன் காணப்படுகிறது. ,

ஈரான் தரப்பிலிருந்து வந்துள்ள இந்த மறுப்புச் செய்தி, நிலையற்ற சந்தையில் மேலும் பதற்றத்தை ஏற்படுத்தக்கூடும். முன்னதாக, ஈரானின் கச்சா எண்ணெய் மற்றும் பெட்ரோலியப் பொருட்கள் மீதான தடைகளை, இந்த ஆண்டு ஏப்ரல் 19 வரை தற்காலிகமாகத் தளர்த்துவதாக அமெரிக்கா வெள்ளிக்கிழமை அறிவித்தது.

இந்தத் தளர்வின் கீழ், ஈரான் கச்சா எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலியப் பொருட்களை அமெரிக்காவிற்குள் விற்பனை செய்யவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின்படி, மார்ச் 20 நிலவரப்படி கப்பல்களில் ஏற்றப்பட்டுள்ள ஈரானிய கச்சா எண்ணெய் மற்றும் பெட்ரோலியப் பொருட்களை உலக நாடுகளுக்கு விநியோகிக்கவும், விற்பனை செய்யவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கு ஆசியாவில் மோதல் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில்,எண்ணெய் எரிவாயு போக்குவரத்துக்கு முக்கியத்துவம் வாய்ந்த ஹார்முஸ் ஜலசந்தி மூடப்பட்ட நிலையிலேயே உள்ளது. இது உலகளாவிய எண்ணெய், எரிசக்தி விநியோகத்தில் பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தி வருகிறது.







ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் அருகே உள்ள பண்ணாரி பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு பண்ணாரியம்மன் திருக்கோவில் குண்டம் திருவிழா மார்ச் 31ம் தேதி செவ்வாய்க்கிழமை நடைபெற உள்ளது. இதையொட்டி மார்ச் 30 காலை 9:00 மணி முதல் மார்ச் 31 மாலை 6:00 மணி வரை போக்குவரத்து மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. அதன்படி சத்தியமங்கலத்திலிருந்து திம்பம், ஆசனூர் வழியாக மைசூர் செல்லும் வாகனங்கள் வடக்குபேட்டை, டி.ஜி.புதூர் நால்ரோடு, கடம்பூர், கேர்மாளம் வழியாக செல்ல வேண்டும். கர்நாடகாவிலிருந்து வரும் வாகனங்கள் ஆசனூர், அரேபாளையம் வழியாகவும், கனரக வாகனங்கள் அந்தியூர், பர்கூர் வழியாகவும் திருப்பி விடப்பட்டுள்ளன. கர்நாடக அரசு பேருந்துகள் பண்ணாரி சோதனைச் சாவடி தற்காலிக பேருந்து நிலையம் வரை மட்டுமே அனுமதிக்கப்படும். பக்தர்கள் தங்கள் வாகனங்களை ஒதுக்கப்பட்ட இடங்களில் நிறுத்திவிட்டு சிறப்பு பேருந்துகள் மூலம் கோவிலுக்கு செல்ல வேண்டும். சத்தியமங்கலம் பண்ணாரி சாலையில் கெய்சர் கார்டன், முருகன் கோவில் காலியிடம், பி.எல்.எஸ் பேக்கரி அருகில், வடவள்ளி சமத்துவபுரம் மற்றும் ஆயில் மில் பகுதிகளில் வாகன நிறுத்துமிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதேபோல் பவானிசாகர் பண்ணாரி சாலையில் பசுவபாளையம் பள்ளி, பண்ணாரி அம்மன் நகர், ராஜன் நகர் முத்து நகர் பகுதிகளில் கார்கள், வேன்கள் மற்றும் இருசக்கர வாகனங்களை நிறுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் இந்த தற்காலிக மாற்றங்களுக்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.



ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் பேருந்து நிலையத்தில் (21.03.2026) நேற்று மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு "வாக்களிப்பது உங்கள் உரிமை மற்றும் கடமை" குறித்து நடைபெற்ற வாக்காளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பேசினார்.

# புனித ரமலான் பண்டிகை உலக அமைதி வேண்டி தூத்துக்குடியில் இஸ்லாமியர்கள் சிறப்புத் தொழுகை

## திரளான இஸ்லாமியர்கள் பங்கேற்பு



புனித ரமலான் பண்டிகையை முன்னிட்டு, தூத்துக்குடி ஈத்கா மைதானத்தில் நடைபெற்ற சிறப்புத் தொழுகையில் ஆயிரக்கணக்கான இஸ்லாமியர்கள் பங்கேற்று உலக அமைதி மற்றும்சகோதரத்துவத்திற்காகப் பிரார்த்தனை செய்தனர்.

தூத்துக்குடி ஜாமியா பள்ளிவாசல் இமாம் ஸதக்கத்துல்லாஹ் தலைமையில் இந்தச் சிறப்புத் தொழுகை நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து, ஜாமியா பள்ளிவாசல் தலைமை இமாம் அப்துல் அளீம் சிறப்பு துவா (பிரார்த்தனை) ஓதினார்.

அப்போது அவர் பேசுகையில்:"தற்போது மேற்காசியாவில் நடைபெற்று வரும் போரினால் குழந்தைகள், பெண்கள் எனப் பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்து வருகின்றனர். இந்தப் போர் உடனடியாக முடிவுக்கு வர வேண்டும். உலகம் முழுவதும் அமைதி திரும்பவும், மக்களிடையே சகோதரத்துவம் தழைக்கவும், இயற்கை பேரிடர்களிலிருந்து மனிதகுலம் காக்கப்படவும் இறைவனை வேண்டுகிறோம்," என்று உருக்கமாகக் குறிப்பிட்டார்.

மாவட்ட அரசு காஜி கூட்டமைப்புச் செயலாளர் முஜிபுர் ரகுமான் உரையாற்றுகையில், "நோன்புப் பெருநாளான இன்று எவரும் உணவில்லாமல் இருக்கக் கூடாது. நோன்பின் மகிமையை உணர்ந்து, வசதியுள்ளவர்கள் எளியவர்களுக்குத் தாராளமாக உதவ வேண்டும்" என வலியுறுத்தினார். தொடர்ந்து, ஜாமியா பள்ளிவாசல் முன்னாள் தலைவர் மீராசா அனைவருக்கும் ரமலான் வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

இவ்விழாவில் உள்ளூர் மக்கள் மட்டுமின்றி, தூத்துக்குடியில் வசிக்கும் வடமாநில இஸ்லாமியர்களும் திரளாகக் கலந்துகொண்டனர். புத்தாடை அணிந்து வந்திருந்த ஆயிரக்கணக்கானோர், "அல்லாஹு அக்பர்" என முழக்கமிட்டுத் தொழுகையில் ஈடுபட்டனர். தொழுகை முடிந்ததும் ஒருவரை ஒருவர் கட்டித்தழுவி ரம்ஜான் வாழ்த்துகளைப் பகிர்ந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் ஜாமியா பள்ளிவாசல் முன்னாள் துணைத்தலைவர் சாகுல் சிராஜுதீன், முன்னாள் செயலாளர் எம்.எஸ். எஃப். ரகுமான், முன்னாள் பொருளாளர் இப்ராகிம் மூஸா, கிரசன்ட் பள்ளி முன்னாள் செயலாளர் முகமது உவைஸ், முஸ்லிம் சமுதாய சங்கத் தலைவர் ஏ.கே. மைதீன், வழக்கறிஞர் சுலைமான், மேட்டுப்பட்டி மீராசா,அரபிக்கல்லூரித் தலைவர் நவரங் சகாப்தின் மற்றும் முக்கியப் பிரமுகர்களான சம்சுதீன், கிதர் பிஸ்மி, யூசுப், ஜாபீர், பீர்மைதீன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் பேருந்து நிலையத்தில் நேற்று (21.03.2026) மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு "வாக்களிப்பது உங்கள் உரிமை மற்றும் கடமை" குறித்து நடைபெற்ற வாக்காளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பேருந்துநிலையத்தில் இருந்த பொதுமக்களிடம் துண்டு பிரசுரங்கள் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.




ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் பேருந்து நிலையத்தில் நேற்று (21.03.2026) மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு "வாக்களிப்பது உங்கள் உரிமை மற்றும் கடமை" குறித்து நடைபெற்ற வாக்காளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியில் அமைக்கப்பட்டிருந்த செல்பி பாயிண்ட்டில் புகைப்படம் எடுத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.



ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் பேருந்து நிலையத்தில் (21.03.2026) நேற்று மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு "வாக்களிப்பது உங்கள் உரிமை மற்றும் கடமை" குறித்து நடைபெற்ற வாக்காளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியில் விழிப்புணர்வு பேரணியினை தொடங்கி வைத்தார்.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி மற்றும் 106 கோபிசெட்டிபாளையம், 107 பவானிசாகர்(தனி) சட்டமன்றத் தொகுதிகளுக்கான தேர்தல் பொது பார்வையாளர் உமா சங்கர் குப்தா ஆகியோர் நேற்று (21.03.2026) ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் மற்றும் பவானிசாகர் சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்குஎண்ணும்மையமானகோபிசெட்டிபாளையம்கலைமற்றும்அறிவியல்கல்லூரியில் ஆய்வு மேற்கொண்டார்கள்.

# தூத்துக்குடி நாயுடு மகாஜன சங்கம் மற்றும் தூத்துக்குடி நாயுடு மகாஜன சங்க டிரஸ்ட் சார்பில் யுகாதி விழா (தெலுங்கு வருடப் பிறப்பு) சிறப்பாக நடைபெற்றது



தூத்துக்குடி நாயுடு மகாஜன சங்கம் மற்றும் தூத்துக்குடி நாயுடு மகாஜன சங்க டிரஸ்ட் சார்பில் யுகாதி விழா (தெலுங்கு வருடப் பிறப்பு) சிறப்பாக நடைபெற்றது.

காலை 7.00 மணியளவில் கோலப்போட்டி நடைபெற்றது. இதில் பெண்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு அழகிய கோலங்களை அமைத்தனர். காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை "திருமண தகவல் பரிமாற்றம்" நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மணமகன், மணமகள் தொடர்பான ஜாதகம், புகைப்படம், பயோடேட்டா ஆகியவற்றை பெற்றோர் சமர்ப்பித்து பதிவு செய்தனர். பதிவு கட்டணமாக ரூ.250 வசூலிக்கப்பட்டது

N. ராமசாமி நாயுடு தலைமை வகித்தார். முன்னிலையில் G. விவேகானந்தன் நாயுடு MBA மற்றும் R. ரெங்கசாமி நாயுடு M.C கலந்து கொண்டனர். வரவேற்புரையை V.P. வெங்கடகிருஷ்ணராஜன் (எ) செல்லசாமி நாயுடு வழங்கினார்.

மேலும்சிறப்புஅழைப்பாளர்களாக S. ஹரிபாலகன் (மேனேஜிங் டைரக்டர், ரீஜென்ட் கிரியேஷன் பிரைவேட் லிமிடெட், கோவில்பட்டி), டாக்டர் D.செல்வராஜ், டாக்டர் P.குமரன், N. சந்திரசேகரன் (அதிபர், அபிராமி சில்க்ஸ், தூத்துக்குடி), A. ஜெயராமன் (அதிபர், அழகர் ஜூவல்லர்ஸ், தூத்துக்குடி) ஆகியோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

நிகழ்ச்சியை V. வெங்கடேசன் நாயுடு தொகுத்து வழங்கினார். நன்றியுரையை வக்கீல் நாகராஜன் பாபு நாயுடு வழங்கினார். இதில், 2025ம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற பொதுத்தேர்வில் 10ம் மற்றும் 12ம் வகுப்புகளில் அதிக மதிப்பெண்கள் பெற்ற முதல் மூன்று மாணவ, மாணவிகளுக்கும், மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் சங்க நிர்வாகிகள் மற்றும் டிரஸ்ட் உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இதில் N. ராமசாமி நாயுடு (தலைவர்), R.ரெங்கசாமி நாயுடு M.C (செயலாளர்), S. ஆதிநாதஆழ்வார் நாயுடு (பொருளாளர்), G.விவேகானந்தன் நாயுடு (மேனேஜிங் டிரஸ்டி), வக்கீல் V.நாகராஜன் பாபு நாயுடு (துணைத்தலைவர்), N. சங்கரநாராயணன் நாயுடு (துணைச் செயலாளர்) உள்ளிட்டோர் டிரஸ்ட் உறுப்பினர்களாக G. ரமேஷ் நாயுடு, N. ராமசாமி நாயுடு, R. ரெங்கசாமி நாயுடு, V.P. வெங்கட கிருஷ்ணராஜன் (எ) செல்லச்சாமி நாயுடு, N. வெங்கடசுப்பிரமணியன் நாயுடு, J. ராஜா காந்தி நாயுடு, V. கோவிந்தசாமி நாயுடு, K. ஜெயக்குமார் நாயுடு, K. குப்புசாமி நாயுடு, V.நாகராஜன் பாபு நாயுடு, N. சங்கரநாராயணன் நாயுடு ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாக G.விவேகானந்தன் நாயுடு, A.மோகன் நாயுடு, V.P. வெங்கடகிருஷ்ணராஜன் (எ) செல்லச்சாமி நாயுடு, N.வெங்கடசுப்பிரமணியன் நாயுடு, K.R. சுப்பிரமணியன் நாயுடு, V. வெங்கடேசன் நாயுடு, A. சங்கரநாராயணன் நாயுடு, C. சங்கர நாராயணன் நாயுடு, S. சங்கர நாராயணன் நாயுடு, M. முனியசாமி நாயுடு, M. செல்வராஜ் நாயுடு, R. முருகன் நாயுடு, I.R. மந்திரமூர்த்தி நாயுடு, S. அங்கு சாமி நாயுடு, G. பெருமாள் நாயுடு, M.நடராஜன் நாயுடு, V. ரமேஷ் நாயுடு, R. தர்மராஜ் நாயுடு உட்பட பலர் திரளாக கலந்து கொண்டனர்.

# தென் கொரிய தொழிற்சாலையில் பெரும் தீ விபத்து: 10 பேர் உயிரிழப்பு, 59 பேர் காயம்

டேஜியோன்: தென்கொரியாவின் மத்திய நகரமான டேஜியோனில் ஒரு வாகன உதிரிபாகத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 10 பேர் உயிரிழந்தனர். இந்த தீவிபத்தில் 59 பேர் காயமடைந்தனர் என்றும், நான்கு பேரைக் காணவில்லை என்றும் தென் கொரிய அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



நடந்தது என்ன?-தென் கொரியாவின் மத்தியப் பகுதியில் உள்ளது டேஜியோன் நகரம். இங்குள்ள வாகன உதிரிபாகத் தொழிற்சாலை ஒன்றில் நேற்று மதியம் தீ விபத்து ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து, தீயைக் கட்டுப்படுத்தவும், மீட்புப் பணிகளை மேற்கொள்ளவும் 500-க்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள், காவல்துறை, விமானங்கள் மற்றும் அவசரகாலப் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.

சம்பவ இடத்திலிருந்து எடுக்கப்பட்ட காணொளிகளில், அந்த வளாகத்திலிருந்து அடர்த்தியான சாம்பல் நிறப் புகை வெளியேறு வதும், சில தொழிலாளர்கள் ஒரு கட்டிடத்திலிருந்து குதிக்கும் காட்சிகளும் வெளியாகி அதிர்ச்சியைக் கடத்தின.

இந்ததீவிபத்து குறித்து பேசிய தீயணைப்புத் தலைவர் நாம் டியூக் வூ, தீ விபத்தில் ஒரு தொழிற்சாலை கட்டிடம் முற்றிலுமாக அழிந்துவிட்டது. அது இடிந்து விழக்கூடும் என்ற அச்சத்தில்தீயணைப்புவீரர்கள் ஆரம்ப த்தில் உள்ளே நுழைய முடியவில்லை. கட்டிடத்தைக் குளிர்விப்பதற்காக ஆளில்லா தீயணைப்பு ரோபோக்களை அதிகாரிகள் பயன்படுத்திபாதுகாப்பு ஆய்வு நடத்திய பின்னர்தான், காணாமல் போன தொழிலாளர்களைத் தேடும் பணிகள் நேற்றிரவு தொடங்கின.

உள்ளூர் நேரப்படி வெள்ளிக்கிழமை மதியம் சுமார் 1:18 மணியளவில் தீ விபத்து குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டது. தீ விபத்துக்கான காரணம் உடனடியாகத் தெரியவில்லை, ஆனால் ஒரு வெடிப்பு ஏற்பட்டதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். தீயணைப்பு வீரர்கள், தீ அருகிலுள்ள கட்டிடத்திற்குப் பரவாமல் தடுப்பதிலும், அந்த இடத்திலிருந்து ரசாயனங்களை அகற்றுவதிலும் கவனம் செலுத்தி வருகின்றனர்.

இந்ததீவிபத்தில் இதுவரை 10 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. 59 பேர் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர், நான்கு பேரைக் காணவில்லை என்றார்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.